# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2015 நவம்பர் மாதம் 03 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

**II.** **அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்**

**III.** **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

**IV.** **மனுக்கள்**

**V.** **கேள்விகள்**

**01.** **கௌரவ ஜனகதீபால் வெலிவத்த உறுப்பினரினால் கௌரவ கடற்றொழில், வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் 2015.10.20 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி:**

**(□/vi (1)15/37)**

அ. ஹோமாகம பொதுச் சபை கூட்டுறவுச் சங்கத்தின் ஆணையாளரின் அதிகாரத்தின் படி நியமிக்கப்பட்ட தலைவரின் அதிகாரங்களின் கீழ் 2015.08.30,31 ஆகிய தினங்களில் அடகு வைக்கப்பட்டிருந்த தங்க நகைகளை விற்பதற்கு உரிய ஏலம் ஒன்று இடம்பெற்றது என்பதை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. இதற்காக முன்வைக்கப்பட்டிருந்த தங்க நகைகளின் அளவு எவ்வளவு ?

இ. அத் தங்க நகைகளுக்காக அடகு வைத்தவர்களுக்கு சங்கத்தினால் வழங்கப்பட்டிருந்த முற்பண நிதி எவ்வளவு ?

ஈ. அத் தங்க நகைகளுக்காக அறவிடப்பட வேண்டிய வட்டி நிதி மற்றும் ஏனைய செலவு நிதி எவ்வளவு ?

உ. அங்கு ஒரு பவுண் தங்கம் விற்கப்பட்டுள்ள விலை எவ்வளவு ?

ஊ. அவ் ஏலத்தினால் சங்கம் பெற்றுக் கொண்டுள்ள தேறிய நட்டம் அல்லது இலாபம் எவ்வளவு ?

எ. அவ் ஏலமானது பொருட்கள் வெவ்வேறாக, மொத்தமாக விற்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஏலம் ஒன்றா ?

ஏ. அதற்கு அங்கீகாரத்தை வழங்கியவர் யார் ?

**02.** **கௌரவ ஜனகதீபால் வெலிவத்த உறுப்பினரினால் கௌரவ கடற்றொழில், வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் 2015.10.20 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி:**

**(□/vi (1)15/38)**

அ. ஹோமாகமை பொதுச் சபை கூட்டுறவுச் சங்கத்தினால் 2014.09.05,06,07 ஆகிய தினங்களில் தங்க நகைகளை விற்பதற்கு உரிய ஏலம் ஒன்று நடாத்தப்பட்டது என்பதனை அறிவீர்களா ?

ஆ. அதற்காக முன்வைக்கப்பட்டிருந்த தங்க நகைகளின் அளவு எவ்வளவு ?

இ. அத் தங்க நகைகளுக்காக சங்கத்தினால் அடகு வைத்தவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த முற்பண நிதி எவ்வளவு ?

ஈ. அத் தங்க நகைகளுக்காக அறவிடப்பட வேண்டிய வட்டி நிதி மற்றும் ஏனைய செலவு நிதி எவ்வளவு ?

உ. அங்கு ஒரு பவுண் தங்கம் விற்கப்பட்டுள்ள விலை எவ்வளவு ?

ஊ. அவ் ஏலத்தினால் சங்கம் பெற்றுக் கொண்டுள்ள தேறிய நட்டம் அல்லது இலாபம் எவ்வளவு ?

**03.** **கௌரவ ஜனகதீபால் வெலிவத்த உறுப்பினரினால் கௌரவ கடற்றொழில், வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் 2015.10.20 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி:**

**(□/vi (1)15/39)**

அ. 2014/2015 ஆம் ஆண்டுகளில் மேல் மாகாண கூட்டுறவு கிராமிய வங்கிகளில் மற்றும் மாவட்ட கிராமிய வங்கி சங்கங்களில் எவ்வளவு தங்க நகைகள் ஏலத்தில் இடப்பட்டுள்ளன ? அதன் அளவு எவ்வளவு ?

ஆ. அப்போது அந்தந்த சங்கங்கள் பவுண் ஒன்றை விற்றுள்ள விலை என்ன ?

இ. எக் கூட்டுறவுச் சங்கமானது அக் காலத்தில் மொத்தமாக விற்பனை செய்துள்ளது ?

ஈ. அத் தங்க ஏல விற்பனையின் போது அந்தந்த சங்கங்கள் பெற்றுக் கொண்டுள்ள தேறிய இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு ?

**04.** **கௌரவ சலோசன கமகே உறுப்பினரினால் கௌரவ கடற்றொழில், வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் 2015.10.20 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி:**

**(□/vi (1)15/40)**

அ. கிராமிய வங்கிகளில் காணப்படும் தங்க நகைகளை ஏலத்தில் இடும் போது எத் தாபனம், முகவர் தாபனமாக செயற்படுகிறது ?

ஆ. கிராமிய வங்கி மற்றும் முகவர் தாபனத்திற்கு இடையே காணப்படும் பிணைப்பு மற்றும் பொறுப்பு யாது ? (ஏலம் ஒன்று எழும் சந்தர்ப்பத்தில்)

இ. அதற்காக அதிகாரத்தில் காணப்படும் சட்டங்கள் யாவை ?

ஈ. தங்க நகைகள் ஏலத்திற்கு இடப்பட்ட பின்னர் அதன் இறுதி தீர்மான அதிகாரம் யாரிடம் உள்ளது ?

**05.** **கௌரவ சலோசன கமகே உறுப்பினரினால் கௌரவ கடற்றொழில், வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் 2015.10.20 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி:**

**(□/vi (1)15/41)**

அ. தற்போது கூட்டுறவுத் திணைக்களத்தினால் பயன்படுத்தப்படும் கூட்டுறவு கிராமிய வங்கி நடவடிக்கை ஒழுங்கு விதிகள் மேல் மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டரீதியான ஆவணம் ஒன்றாகுமா ?

ஆ. அதனை அங்கீகரித்தவர் யார் ? எப்போது ?

இ. மேலே கூறப்பட்ட ஒழுங்கு விதிகள் மேல் மாகாண கூட்டுறவுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டு தற்போது பயன்படுத்தப்படும் கிராமிய வங்கி நடவடிக்கை ஒழுங்கு விதிகளா ?

ஈ. மேல் மாகாண சபையின் 1998 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க கூட்டுறவு நியதிச் சட்டத்தின் 61 ஆவது பிரிவின் 3 ஆவது உப பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் மேலே கூறிய கிராமிய வங்கி நடவடிக்கை ஒழுங்கு விதிகள் தயாரிக்கப்பட்டுள்ளனவா ?

உ. மேற் கூறிய நடவடிக்கை ஒழுங்கு விதிகள் அரச வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் வெளியிடப்பட்டுள்ளனவா ?

ஊ. மேல் மாகாண சபையின் 2011 இன் 04 ஆம் இலக்க கூட்டுறவு நியதிச் சட்டத்தின் 36(3) ஆம் இலக்கத்தின் கீழ் வரும் மேற் கூறிய கிராமிய வங்கி நடவடிக்கை ஒழுங்கு விதிகள் அங்கீகரிக்கப்பட்டனவா ? அது எப்போது ?

எ. அதன் கீழ் தண்டனை வழங்குவதற்காக இந்த நடவடிக்கை ஒழுங்கு விதிகளை பயன்படுத்துவதன் காரணமாக இது வரை உங்களினால் மேற்கொள்ளப்பட்ட விடயங்களை, அதிகாரம் அற்ற மற்றும் பயனற்றவையாகும் என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

**06.** **கௌரவ மஹேஷ் அல்மேதா உறுப்பினரினால் கௌரவ கடற்றொழில், வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் 2015.10.20 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி:**

**(□/vi (1)15/43)**

அ. மேல் மாகாண சபையின் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் கீழ் வீதிப் பரிசோதனையாளர்கள் எத்தனை பேர் கடமையில் ஈடுபட்டுள்ளனர் ?

ஆ. அவ் உத்தியோகத்தர்களுக்கு உள்ள பணி மற்றும் பொறுப்பு யாது ?

இ. அவ் உத்தியோகத்தர்களினால் நாளொன்றுக்கு எத்தனை பஸ் வண்டிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன ?

ஈ. சென்ற வாரத்தினுள் மேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் கீழ் பயணத்தில் ஈடுபடும் பஸ் வண்டிகளுக்கு நிகழ்ந்த விபத்துகளின் எண்ணிக்கை எத்தனை ?

உ. அவ் விபத்துக்கள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள சட்ட ரீதியான நடவடிக்கைகள் எவை ?

ஊ. ஒழுங்கான சாரதி அனுமதிப் பத்திரம் ஒன்று இல்லாது பஸ் வண்டியைச் செலுத்திய சாரதிகள் எத்தனை பேர் ? (இக் காலத்தினுள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்)

எ. அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ள சாரதிகள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது ?

ஏ. அவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக இக் கௌரவ சபையை அறிவுறுத்துவீர்களா ?

ஐ. இல்லையாயின் ஏன் ?

**07.** **கௌரவ மஞ்சு சிறீ அரங்கல - எதிர்க்கட்சித் தலைவரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம் அத்துடன் தகவல் தொழினுட்ப அமைச்சரிடம் 2015.10.20 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :**

**(□/vi (1)15/44)**

அ. மேமா/கொ குணசிங்ஹ வித்தியாலயத்தின் நிர்மாணம் மற்றும் பழுதுபார்ப்புக்களின் ஒப்பந்தக்காரர் ஒருவராக இலக்கம் 64, ஆட்டிகல, ஹங்வெல்ல. என்ற முகவரியைச் சேர்ந்த திரு. வி.டி.ரீ. அறுணகுமார அவர்கள் செயற்பட்டுள்ளார் என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. அவரினால் 2014 ஆம் ஆண்டில் அப் பாடசாலையின் முதலாம் தர வகுப்பிற்கு உரிய அறை ரூபா. 150,000/- பெறுமதியிலும் மற்றும் காரியாலய கட்டடம் ரூபா. 500,000/- செலவிலும் பழுதுபார்ப்பு மேற்கொள்ளப்பட்டது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

இ. இந் நிர்மாணம் கொழும்பு பிரதேச செயலாளர் காரியாலயத்தின் மற்றும் கல்வித் திணைக்களத்தின் பொறியியலாளரின் மேற்பார்வைக்கு உட்பட்டு கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஈ. அக் கொடுப்பனவுக்காக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு அக் கொந்தராத்துக்கு உரிய நிதி வரவு வைக்கப்பட்டுள்ளது என்பதனை அறிவீர்களா ?

உ. அந் நிதி வழங்கப்பட்டிருந்த வேளையில் ரூபா 346,668/- நிதியும் மற்றும் தடுப்பு நிதியான ரூபா. 65,000/- நிதியும் ஒப்பந்தக்காரர் திரு. அறுணகுமார அவர்களுக்கு செலுத்தப்படவில்லை என்பதனை அறிவீர்களா ?

ஊ. இந் நிர்மாணங்களின் அங்கீகரிக்கப்பட்ட நிதியில் 5% கொமிஸ் ஒன்று பாடசாலை அபிவிருத்தி சங்கத்திற்கு ஒப்பந்தக் காரரினால் செலுத்தப்பட்டுள்ளது என்பதனை அறிவீர்களா ?

எ. இவ் ஒப்பந்தக் காரருக்கு செலுத்துவதற்காக பாடசாலை அபிவிருத்தி சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதியினை அவருக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பீர்களா ?

ஏ. இவ்வாறு சட்டரீதியான கொடுப்பனவினை தட்டிக் கழித்துள்ள அதிபர் உள்ளிட்ட பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் தொடர்பாக எடுக்கும் நடவடிக்கை யாது ?

**08.** **கௌரவ ஹரிஸ்சந்திர த கொஸ்தா உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :**

**(□/vi (1)15/46)**

அ. கெஸ்பேவ நகர சபையின் அதிகாரப் பிரதேசத்திற்கு உரிய “ஹேநகம்பிலதெனிய” வயலில் கமநல சேவை காரியாலயத்தினால் 1978 கால எல்லையினுள் நிர்மாணிக்கப்பட்ட மேலதிக நீரை

வெளியேற்றும் பிரிவு மற்றும் இயற்கையாக மழைநீர் வழிந்தோட இருந்த போக்கு ஒன்று கல் அமுக்கும் இயந்திரத்தைக் கொண்டு அமர்த்தி தார் இடப்பட்டு இப் பிரதேசத்தில் காணப்படும் தாழ்ந்த 06 ஏக்கரை விட அதிக அளவான காணியை அங்கீகாரம் இன்றி தரைக் காணியாக தந்திரமாக மாற்றி அதில் அங்கீகாரம் அற்ற நிர்மாணங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதனை அறிவீர்களா ?

ஆ. கெஸ்பேவ நகர சபையின் திட்டமிடல் பிரிவின் தொழினுட்ப உத்தியோகத்தரினால் இப் பிரதேசத்தின் தாழ்ந்த காணிப் பிரதேசங்களுக்கு மற்றும் 10-15 வருடத்திற்கு இடப்பட்ட பழைய மூன்று மாடிக் கட்டடங்களுக்கு முறைகேடான முறையில் புதிய வரைபடத்தை அங்கீகரித்து வழங்கிய போது கெஸ்பேவ நகர சபைக்கு அறவிடப்பட வேண்டிய பெருமளவு தண்டப் பணம் சபைக்கு கிடைக்காத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. இதன் காரணமாக ஏற்படும் சுற்றாடல் பாதிப்பு சுகாதார சீர்கேடு ஆகிய நிலைமைகள் தொடர்பாகவும் ஏற்பட்டுள்ள முறைகேடான செயற்பாடுகள் தொடர்பாகவும் ஒழுங்கான விசாரணை ஒன்றினை நடாத்துவீர்களா ?

ஈ. இல்லையாயின் ஏன் ?

**09.** **கௌரவ கித்சிறி கஹடபிடிய உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(□□/vi (1)15/47)**

அ. உங்களது அமைச்சில் 2015 ஆம் ஆண்டினுள் வெற்றிடமாக காணப்படும் தொழில்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஆ. இவ் வெற்றிடங்களுக்காக 2015 ஆம் ஆண்டினுள் ஆட்சேர்க்க திட்டமிடப்பட்டு உள்ளதா ?

இ. 2015 ஆம் ஆண்டினுள் ஆட்சேர்க்க திட்டமிடப்பட்டுள்ள வெற்றிடங்களை வெவ்வேறாக காட்டினால் அவை யாவை ?

ஈ. இவ் வெற்றிடங்கள் காணப்படும் தொழிலுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் போது உத்தேசிக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த கல்வித் தகைமை என்ன ?

உ. இவ் வெற்றிடங்களை நிரப்பும் போது பயன்படுத்தப்படும் நடைமுறைகள் எவை ?

**10.** **கௌரவ கித்சிறி கஹடபிடிய உறுப்பினரினால் கௌரவ சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளிர் விவகாரம் அத்துடன் சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(□□/vi (1)15/48)**

அ. உங்களது அமைச்சில் 2015 ஆம் ஆண்டினுள் வெற்றிடமாக காணப்படும் தொழில்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஆ. இவ் வெற்றிடங்களுக்காக 2015 ஆம் ஆண்டினுள் ஆட்சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளதா ?

இ. 2015 ஆம் ஆண்டினுள் ஆட்சேர்க்க திட்டமிடப்பட்டுள்ள வெற்றிடங்களை வெவ்வேறாக காட்டினால் அவை யாவை ?

ஈ. இவ் வெற்றிடங்கள் காணப்படும் தொழிலுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் போது உத்தேசிக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த கல்வித் தகைமை என்ன ?

உ. இவ் வெற்றிடங்களை நிரப்பும் போது பயன்படுத்தப்படும் நடைமுறைகள் எவை ?

**11.** **கௌரவ கித்சிறி கஹடபிடிய உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதட்கு :** **(□□/vi (1)15/49)**

அ. உங்களது அமைச்சில் 2015 ஆம் ஆண்டினுள் வெற்றிடமாகக் காணப்படும் தொழில்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஆ. இவ் வெற்றிடங்களுக்காக 2015 ஆம் ஆண்டினுள் ஆட்சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளதா ?

இ. 2015 ஆம் ஆண்டினுள் ஆட்சேர்க்க திட்டமிடப்பட்டுள்ள வெற்றிடங்களை வெவ்வேறாக காட்டினால் அவை யாவை ?

ஈ. இவ் வெற்றிடங்கள் காணப்படும் தொழிலுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் போது உத்தேசிக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த கல்வித் தகைமை என்ன ?

உ. இவ் வெற்றிடங்களை நிரப்பும் போது பயன்படுத்தப்படும் நடைமுறைகள் எவை ?

**12.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ கடற்றொழில், வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :**
**(□/vi (1)15/50)**

அ. பயனிகள் போக்குவரத்து அதிகார சபையின் புதிய காரியாலயத்திற்குப் பின்னால் காணியினை கொள்வனவு செய்ததன் மூலம் முறைகேடு ஒன்று நிகழ்ந்துள்ளது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஆ. இக் காணியைக் கொள்வனவு செய்த தினம், பெறுமதி, காணியின் அளவு, காணிக்கு உட்புக வழி ஒன்று காணப்படுகின்றதா ? காணப்பட்டால் அதன் அகலம் எவ்வளவு எனக் குறிப்பிட முடியுமா ?

இ. காணியினை கொள்வனவு செய்ய எடுத்த கடன் நிதிக்காக இதுவரை செலுத்தப்பட்டுள்ள மற்றும் செலுத்தி முடிக்காத நிலுவை நிதி எவ்வளவு ?

ஈ. காணியினை கொள்வனவு செய்யக் காரணமாக இருந்த விடையங்கள் இது வரை நிறைவேற்றப்பட்டு உள்ளனவா ?

உ. இல்லையாயின் ஏன் ?

**13.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ கடற்றொழில், வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :**
**(□/vi (1)15/51)**

அ. ஹோமாகம புதிய பஸ் தரிப்பிடத்தை நிர்மாணிப்பதற்காக செலவு செய்யப்பட்ட மொத்த நிதி எவ்வளவு ?

ஆ. i. நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்ட தினம் எது ?
ii. நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்ட தினம் எது ?

இ. இது வரை ஏன் ஒழுங்கான பஸ் தரிப்பு நிலையம் ஒன்றாக பயன்படுத்தப்படவில்லை ?

ஈ. பஸ் தரிப்பு நிலையத்தை நிர்மாணித்ததன் ஊடாக எதிர்ப்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்படாமை மற்றும் எதிர்ப்பார்த்த செலவை விட அதிகமாக நிதி செலவு செய்ததன் காரணமாக ஏற்பட்டுள்ள நட்டம் எவ்வளவு ?

உ. இளப்பொன்று ஏற்பட்டு இருந்தால் அதற்குப் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் யார் ?

ஊ. பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் தொடர்பாக எடுக்கும் அல்லது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது ?

உ. இல்லையாயின் ஏன் ?

**14.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ கடற்றொழில், வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :**
**(□/vi (1)15/52)**

அ. கேள்வி நடைமுறை ஒன்று இல்லாது பஸ் வண்டிகளுக்காக இலவசமாக அனுமதிப் பத்திரம் வழங்கும் முறைகள் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் கீழ் காணப்படுகின்றதா ?

ஆ. i. முறைகளுக்கு இணங்க அல்லது இலவசமாக அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டு உள்ளதா
ii. எந்த பஸ் வண்டிகளுக்காக ? அவற்றின் உரிமையாளர்கள் யார் ?

இ. அவ்வாறு பஸ் வண்டிகளுக்காக இலவசமாக அனுமதிப் பத்திரங்களை வழங்கியதன் காரணமாக இல்லாமல் போன வருமானம் எவ்வளவு ?

ஈ. ஏற்பட்டுள்ள நஷ்டத்திற்கு பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் யார் ?

உ. பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் தொடர்பாக எடுக்கும் அல்லது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது ?

ஊ. இல்லையாயின் ஏன் ?

**15.** **கௌரவ யூ. ஜோர்ஜ் பெரேரா எதிர்க்கட்சியின் பிரதான ஏற்பாட்டாளரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் தகவல் தொழினுட்ப அமைச்சரிடம் கேட்பதற்கு : (□/vi (1)15/53)**

அ. களனி கல்வி வலையத்திற்குரிய களனி கல்வி கோட்டப் பாடசாலைகளில் அதிபர்களுக்கான பரீட்சையில் சித்தி பெற்று அதிபர் தரத்தில் உள்ள ஆசிரிய / ஆசிரியைகள் எத்தனை பேர் கடமையில் ஈடுபட்டு உள்ளனர் ?

ஆ. அவர்களை பெயரின் அடிப்படையில் குறிப்பிட முடியுமா ?

இ. அவ் ஆசிரியர்கள் களனி கோட்டப் பாடசாலைகளில் அதிபர் பதவியினை வகிக்கின்றனரா ?

ஈ. அப்படியாயின் அப் பாடசாலைகளின் மற்றும் அதிபர்களின் பெயர்களைக் குறிப்பிட முடியுமா ?

உ. களனி கல்வி கோட்டத்தில் அதிபர் தரம் இல்லாத கல்வி நிர்வாக சேவை பரீட்சையில் சித்திபெற்றவர்கள் அதிபர் பதவிகளை வகிக்கின்றனரா ?

ஊ. அவ் அதிபர்களின் பெயர் மற்றும் பாடசாலையின் பெயர்களைக் குறிப்பிட முடியுமா ?

எ. அப்படியாயின் அவர்களை தற்போது கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்காக நியமிக்காமைக்குரிய காரணம் என்ன ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. சபைக் கூட்டம் I

<u>சபை நடவடிக்கை தொடர்பான விடயப் பொறுப்பு அமைச்சரினால் முன்வைப்பதற்கு</u> :

பிரேரணை :

இதற்கு முன்னர் எவ்வாறான முடிவுக்கு வந்த போதும், அவற்றைக் கருத்தில் கொள்ளாது 2015.10.21 ஆந் திகதி நடைபெற்ற சபை நடவடிக்கைச் செயற்குழுக் கூட்டத்தில் இணக்கத்தைத் தெரிவித்ததற்கு இணங்க 2015.11.17 ஆந் திகதி கலைந்து சென்ற பின் இம் மாகாண சபை 2015.11.24 ஆந் திகதி மு.ப. 9.30 க்கு கூடவேண்டியதுடன், அந்த 2015.11.24 ஆந் திகதியை <u>2016 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றினை சமர்ப்பிப்பதற்கு ஒதுக்கப்பட்ட தினமாக</u> கருதிச் செயற்பட வேண்டும்.

**சபைக் கூட்டம் - II**

<u>சபை நடவடிக்கை தொடர்பான விடயப் பொறுப்பு அமைச்சரினால் முன்வைப்பதற்கு</u> :

பிரேரணை :

2016 ஆண்டின் நிதிக் கூற்று தொடர்பான விவாதம் மற்றும் அதனோடு தொடர்புடைய விடைய நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நாட்கள் தொடர்பாக, இதற்கு முன் எவ்வாறான முடிவு எடுக்கப்பட்டிருந்த போதும் அது எவற்றையும் கருத்திற் கொள்ளாது 2015.10.21 ஆந் திகதி நடைபெற்ற சபை நடவடிக்கை செயற்குழுக் கூட்டத்தில் வரப்பட்ட இணக்கத்தினைக் கருத்தில் கொண்டு 2015 டிசெம்பர் மாதம் 15,16,17,18,21 மற்றும் 22 ஆகிய தினங்கள் <u>2016 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றின் மீதான விவாதம்</u> மற்றும் அதனோடு தொடர்புடைய விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட தினங்களாகக் கருதிச் செயற்பட வேண்டும். ”

**சபை நடவடிக்கை தொடர்பான விடயப் பொறுப்பு அமைச்சரினால் முன்வைப்பதற்கு** :

பிரேரணை :

2015.10.21 ஆந் திகதி நடைபெற்ற சபை நடவடிக்கைச் செயற்குழுக் கூட்டத்தில் வரப்பட்ட தீர்மானத்தின் படி 2015 டிசெம்பர் மாதம் 08,09,10,11, மற்றும் 14 ஆகிய தினங்கள் சபைக் கூட்டம் நடைபெறாத தினங்களாகக் கருதிச் செயற்பட வேண்டும். "

## X. சபை நடவடிக்கை

**சபை நடவடிக்கை தொடர்பான விடயப் பொறுப்பு அமைச்சரினால் முன்வைப்பதற்கு** :

பிரேரணை :

"இன்றைய தின நிகழ்ச்சி நிரலில் பொது நடவடிக்கை விடயத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு விதி இலக்கம் 52(5), 57(4), 57(5) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளினால் எந்தவொரு தடையும் ஏற்படக் கூடாது எனக் கருதிச் செயற்பட வேண்டும். "

## XI. பொது நடவடிக்கை

**01. கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சர் (மே.மா)**

பிரேரணை

**2015 குறைநிரப்பு மதிப்பீடு – 01**

மேல் மாகாண சபையின் அமைச்சுக்கள்/ திணைக்களங்கள்/ காரியாலயங்கள், உள்ளூராட்சித் தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியவைகளுக்கு அரச நிர்வாகச் சுற்றறிக்கை 24/2014, 24/2014(1) மற்றும் 5/2015 மூலம் அதிகரிக்கப்பட்ட இடைக்கால படியைச் செலுத்த, அத்துடன் கட்டாயமாகச் செலுத்த வேண்டிய சம்பளம், ஆசிரிய நிலுவைச் சம்பளம் மற்றும் படிகளை செலுத்துவதற்குத் தேவையான மேலதிக ஏற்பாட்டினை பெற்றுக் கொடுத்தல்,

கல்வித் திணைக்களத்தின் ஆசிரியர்களின்/உத்தியோகத்தர்களின் சொத்துக் கடனுக்கு உரிய வட்டியைச் செலுத்தத் தேவையான மேலதிக ஏற்பாட்டினை ஏற்படுத்துதல் போன்ற செயற்றிட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான மேலதிக ஏற்பாட்டினை ஏற்படுத்துதல்,

கல்வி மற்றும் சுகாதார துறைகளுக்காக 2014 ஆம் ஆண்டில் உலக வங்கி உதவியின் கீழ் வழங்கப்பட்ட நிதியில் செலவு செய்யப்படாது மிகுதியாக காணப்படும் நிதியை அத்துறைகளின் அபிவிருத்தி செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பயன்படுத்த தேவையான ஏற்பாட்டினை ஏற்படுத்தவும், தபால் மற்றும் நீதி மன்ற நடவடிக்கைகளைத் தவிரக் காணப்படும் ஒப்பந்தக் கட்டணம் உள்ளிட்ட முத்திரைக் கட்டண வருமானத்தை ரூபா 500 மில்லியன் வரை உயர்த்துவதற்கு உரியதான வருமான மதிப்பீட்டு திருத்தம் மற்றும் அந் நிதியை உள்ளூராட்சித் தாபனங்களுக்கு செலுத்துவதற்குத் தேவையான ஏற்பாட்டினை ஏற்படுத்துதல் போன்ற தேவைகளுக்காக,

2015 ஆம் ஆண்டின் குறை நிரப்பு மதிப்பீடு ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டி உள்ளபடியால் அரச மானியம் ரூபா. 7,799,160,000/- உம் 2014 ஆம் ஆண்டில் உலக வங்கி உதவியின் கீழ் வழங்கப்பட்ட நிதியில் செலவு செய்யப்படாது மீதமாகக் காணப்படும் நிதி ரூபா 77,610,000/- உம் மற்றும் மாகாண சபை வருமானத்தில் ரூபா. 500,000,000/- உம் ஆன மொத்த ஏற்பாடு ரூபா எண்ணூற்றி முப்பத்தேழு கோடி அறுபத்தேழு இலட்சத்து எழுபதாயிரம் (ரூபா. 8,376,770,000/-) ஆகிய வகையில் தயாரிக்கப்பட்ட 2015 குறைநிரப்பு மதிப்பீடு - 01 அங்கீகரிக்க வேண்டும்.

**02. கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சர் (மே.மா)**

பிரேரணை

**2015 குறைநிரப்பு மதிப்பீடு - 01 உரிய ஒதுக்கீட்டு நியதிச் சட்டம்**

2015 ஆம் ஆண்டின் குறைநிரப்பு மதிப்பீடு 01 இற்குத் தேவையான ரூபா எண்ணூற்றி முப்பத்தேழு கோடி அறுபத்தேழு இலட்சத்து எழுபதாயிரம் (ரூபா. 8,376,770,000/-) ஆகிய நிதியை மேல் மாகாண சபை நிதியத்தில் இருந்து செலுத்துவதற்கும், இலங்கை அரசினால் மானியமாகவோ அல்லது வேறு முறையில் கிடைக்கப்பெறும் நிதியை மேல் மாகாண சபை நிதியத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு அதிகாரம் வழங்கும் 2015 இன் .......... ஆம் இலக்க ஒதுக்கீட்டு நியதிச் சட்டத்தை அங்கீகரிக்க வேண்டும்.

## XII. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01. கௌரவ கே.டி. அறுண தீபால் அவர்கள்**

மாகாண சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு உரியதாக மாகாண சபையினால் இவ் வேளையில் பல எண்ணிக்கையான நியதிச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்ட போதும் இந் நியதிச் சட்டங்கள் தொடர்பாக தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் அதேபோல் மக்களிடையே காணப்படும் அறிவு மிகவும் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. நிறைவேற்றப்பட்டுள்ள நியதிச் சட்டங்கள் மக்களிடையே பரிமாற்றம் அடையாமை இதற்கு பிரதான காரணம் ஒன்று என்பது தெரியவந்துள்ளது. எனவே மேல் மாகாண மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்டுள்ள எல்லா நியதிச் சட்டங்களையும் பதிப்புச் செய்து மக்களுக்கு கொள்வனவு செய்வதற்கு சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுக்க வேண்டும் எனவும் அந்த நியதிச் சட்டங்கள் மற்றும் மாகாண சபையினால் வெளியிடப்படும் ஏனைய பொது ஆவணங்களை பொது மக்களுக்கு கொள்வனவு செய்வதற்கு ஏற்ற முறையில் வேறாக விற்பதற்கு விற்பனை நிலையம் ஒன்றினை ஸ்தாபிக்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகின்றது. **(பி/vi (1)14/12)**

**02. கௌரவ இந்திக பண்டார அவர்கள்**

மேல் மாகாண அதிகாரப் பிரதேசத்தினுள் பாதுகாப்பு படையினருக்கான பல கிராமங்கள் அமைந்துள்ளதுடன் இக் கிராமங்களில் 30 வருட காலமாக எங்கள் நாட்டில் காணப்பட்ட யுத்தத்தில் எங்களது நாட்டை மீட்டெடுப்பதற்காக தமது உயிர்களை தியாகம் செய்து யுத்தத்தினால் அங்கவீனர்களாக்கப்பட்ட பாதுகாப்புப் படையினரும் அவர்களின் பெற்றோரும் மனைவிமார்களும் பிள்ளைகளும் வகிக்கின்றனர்.

தேர்தல் காலத்தில் எல்லா அரசியல் கட்சியினதும் அங்கத்தவர்கள் பாதுகாப்பு படையினரின் கிராமங்களுக்குச் சென்று வாக்குகளைப் பெற்ற போதும், அந்த கிராமங்களில் வசிப்பவர்களுக்கு போக்குவரத்து, சுகாதார, கல்வி, குடிநீர் வசதிகள் இல்லாமையால் பல சிக்கல்களுக்கு மத்தியில் வாழ்கின்றனர். எங்களது நாட்டிற்காக மிகப்பெரிய தியாகத்தைச் செய்து பாதுகாப்பு படையினருக்கான கிராமங்களில் வகிக்கும் மக்களின் மேற்கூறிய தேவைகள் உள்ளிட்ட பிரச்சினைகளை ஆராய்ந்து பார்த்து அதற்கான தீர்வு ஒன்றாக பாதுகாப்பு படையினருக்கான கிராமங்களில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான ஒழுங்கான முறை ஒன்றினைத் தயாரிக்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை பிரேரணை தெரிவிக்கின்றது. **(பி/vi (1)14/13)**

## XIII. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2015.10.21 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.